OS No.70/2017, நாள்: 16.09.2019

<u>வா.சா.1 ___ ஹேமநாதன் ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

நான் திருவயலூர் கிராமம் கதவு எண்.1/360 தற்போது குடியிருக்கவில்லை என்றால் சரிதான். தற்போது ஒசூரில் குடியிருந்து வருகிறேன். மேற்சொன்ன அதே முகவரியில்தான் 1, 2 பிரதிவாதிகளான எனது தந்தையும் தாயரும் குடியருந்து வருகிறார் என்றால் சரிதான். அதே முகவரியில்தான் 1ம் வாதி சுரேந்திர பாபுவும் குடியிருந்து வருகிறார் என்றால் கடந்த 4-5 மாதங்களாக பாதுகாவலரக பணிசெய்து அங்கேயே குடியிருந்து வருகிறார். தற்போது திருவயலூர் கிராம் கதவு எண்.1/360ல் வசித்து வருவதாக கூறியிருந்தால் அது தவறானது என்றால் சரியல்ல வேலையின் காரணமாக ஒசூரில் இருந்து வருகிறார். 3 முதல் 6 பிரதிவாதிகளை இவ்வழக்கில் எதற்காக பிரதிவாதிகளாக சேர்த்துள்ளோம் என்றால் நாங்கள் எங்களுடைய நிலத்தை பிரித்து சுவாதீனம் அடைய முயற்சித்தபோது அவர்கள் எங்களுடைய நிலம் என்று தடுத்தார்கள் அதனால் அவர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளோம். எதன் அடிப்படையில் 3 முதல் 6 பிரதிவாதிகள் அவர்களுக்கு உரிமையானது என்று கோரினார்கள் என்றால் 1,2 பிரதிவாதிகள் அவர்களுடன் வந்து பணம் கேட்டுள்ளதாகவும் அதனால் நிலம் அனைத்தும் அவர்களுக்கு பாத்தியம் என்று கோரினார்கள். இதே சொத்துக்களை பொறுத்து நானும் 1ம் வாதியும் கிருஷ்ணகரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.63/2000 என்ற எண்ணில் பாகபிரிவின கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி வேண்டுமானால் தாக்கல் செய்திருக்கலாம். அந்த வழக்கிலேயே இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்காக எதிராகத்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் என் அண்ணனுக்குதான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.43/2010ல் 1, 2 பிரதிவாதிகளை மட்டும்தான் தரப்பினர்களாக சேர்த்து தாக்கல் செய்தோம் என்றும் மற்ற பிரதிவாதிகளை தரப்பினர்களை

சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த 5ம் பிரதிவாதியை அ.வ.எண்.43/2010ல் தரப்பினராக சேர்க்காததால் அந்த தீர்ப்பு 5ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே 5ம் பரதிவாதி வசம்தான் வழக்கு சொத்துக்கள் சுவாதீனம் இருப்பதால் எங்களிடமோ 1, 2 பிரதிவாதிகளிடமோ சுவாதீனம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்துக்களை பொறுத்து 4ம் பிரதிவாதி எஸ்.எப்.சி.ஒ.பி எண்.111/2011 என்ற எண்ணில் தாக்கல் செய்த வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு கிருஷ்ணகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தற்போதுவரை நிலுவையில் இருந்த வருகிறது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தும் தெரியுமா என்றால் என் அண்ணனுக்குதான் எல்லாம் தெரியும் அதில் 1,2 சங்கதிகளை என்னிடம் கூறாமல் விட்டிருக்கலாம். 2017ம் ஆண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்ய தகவல்களை அளித்து அதற்கான ஆவணங்களையும் வழக்கறிஞரிடம் என் அண்ணனும் அப்பாவும்தான் கொடுத்தார்கள் என்றால் நானும் என் அண்ணனும்தான் கொடுத்தோம். என் அப்பாவுடன் நான் பேசுவதில்லை. 2003ம் அண்டு இந்த 5 ம் பிரதிவாதிக்கும் நானும் 1ம் வாதியும் சேர்ந்து ஒரு சட்டஅறிவிப்பு அனப்பினோம் என்றால் அது என் அண்ணனுக்குதான் தெரியும். அதேபோல் 26.10.2002ம் தேதியில் இதே சொத்துக்களை பொறுத்து 5ம் பிரதிவாதிக்கு ஒரு சட்டஅறிவிப்பு அனுப்பினோம் என்றால் அது எனக்கு தெரியாது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.